**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.60-2021

பி.வா.சா.1- முத்துராஜா த/பெ வைரப்பெருமாள் என்பவருக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 23.10.2025ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பி.வா.சா.1-</u>** <u>முத்துராஜா த/பெ வைரப்பெருமாள்</u>

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1. AS.NO.3/2004 உத்தரவு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியாக தெரியவில்லை. AS.NO.3/2004 வழக்கில் வாதி பெரியசாமி ஒரு தரப்பினர் இல்லை என்றால் சரிதான். AS.NO.3/2004 ல் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தற்பொழுது நான் குடியிருக்கும் இடத்தின் சர்வே எண்.171/5B3 ஆகும். 2010 ம் ஆண்டு சர்வே எண்.171/5B3 உட்பிரிவு செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. 1991 ம் ஆண்டு நானும், எனது சகோதரரும் எழுதிக் கொண்ட பாகப்பத்திரம் மோசடியானது என்றும், அதன் அடிப்படையில் 2 முதல் 5 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரமும் மோசடியானது என்றால் சரியல்ல. 7 செண்ட் இடம் மட்டும் எனக்கு பாத்தியம் என்று நான் ஒப்புக் கொண்டு பட்டா கேட்டு எனக்கும், மற்ற பிரதிவாதிகளுக்கும் 7 செண்ட்க்கு மட்டும் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல.

2. நான் 7 செண்டிற்கு பட்டா கேட்டு மனு கொடுத்த விவரம் வருவாய் துறையினரை அழைத்து விசாரணை செய்தால் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை அளந்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்து நானும், மற்ற பிரதிவாதிகளும் எங்களது வீட்டை விரிவுப்படுத்தி 2014 ம் ஆண்டு கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. 1999 ல் 2006 மற்றும் 2009 ஆகிய ஆண்டுகளில் வாதி எங்களுக்கு அதிகப்படியான இடங்களுக்கு பட்டா வழங்கப்பட்டது மாற்றம் செய்ததை மனு கொடுத்து நாங்கள் எதுவும் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 7 செண்டை தவிர 9 1/2 செண்ட் நிலத்திற்கு எதிர் கோருரிமை பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் எனக்கும், மற்ற பிரதிவாதிகளுக்கும் எந்த உரிமையும் கிடையாது வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை அபகரித்து வைத்துக் கொண்டு நானும், மற்ற பிரதிவாதிகளும் வாதிக்கு எதிராக பொய்யாக கட்சி

செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–திரு.ஆர்.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.